www.omsakthionline.com

# ஓம் சக்தி

மே 2007
விலை ரூ.10

ஆசிரியர் நா.மகாலிங்கம்



பார்வதியின் ஞானக் குழந்தைகள்

சிறப்பு இணைப்பு

பத்மபூஷண் விருதுக்குப் பாராட்டு

# நதிகளை இணைப்போம்! அதிகாரங்களைப் பிரிப்போம்!

நா. மகாலிங்கம்





இணைக்கப்பட்டிருக்க வேண்டிய நதிகள் பரவலாகவும், பரவலாக்கப்பட்டிருக்க வேண்டிய ஆட்சி அதிகாரங்கள் குவிக்கப்பட்டதாலும்தான் இந்தியாவில் பல பிரச்னைகள் தீர்வு காணப்படாமல் நீடித்து வருகின்றன.

நதிகளை மாநில எல்லைகளுக்குள் மட்டுமே பயன்படுத்திக் கொள்ளும் முயற்சி இயற்கைக்கு விரோதமானது.

பஞ்ச பூதங்களான நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் ஆகிய ஐந்தும் மனிதன் உற்பத்தி செய்தவை அல்ல. இயற்கையின் வரங்கள். இந்த பூமியும், தண்ணீரும் மனிதனுக்கு மட்டுமே அல்ல. ஆகாயமும், காற்றும் போல அனைத்து உயிர்களுக்கும் உரியவை.

இதை உணர்ந்தே காந்திஜி, ஜமீன்தார்களின் பூமியை அரசு எடுத்துக் கொண்டால், அதற்கு நஷ்டஈடு தரக்கூடாது என்று கூறினார் என்பது நினைவுகூரத்தக்கது.

நதிநீர் இயற்கையின் வரம் என்ற ஞானம் இன்றைய இந்திய மக்களுக்கு போதிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

ஏனெனில், இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, மொழி அடிப்படையில் இந்திய தேசம் பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. பிரிக்கப்பட்ட மாநிலங்களுக்குள் ஓடிக் கொண்டிருக்கும் நதிகள், அந்தந்த மாநிலங்களுக்கே உரியவை என்ற சுயநலப் போக்குத் தலைதூக்கி விட்டதால், சுதந்திரத்தையே அது அர்த்தமற்றதாக்கி வருகிறது.

இந்தியா ஒரே தேசம். அதுவும் விவசாய தேசம். 70 கோடி மக்களின் வாழ்வாதாரம் விவசாயம்தான். விவசாயம் வேறு, இந்தியா வேறு அல்ல.

விவசாயத்தை அபிவிருத்தி செய்ய இந்திய விவசாயிகள் வேறு எதனையும் விட தண்ணீரைத்தான் கேட்கிறார்கள். தண்ணீர் தரப்படுமானால், நமது மொத்த உள்நாட்டின் 9.2% உற்பத்தியில் விவசாயத்தில் வளர்ச்சி இப்போதுள்ள 1.98 சதவிகிதத்திலிருந்து மத்திய அரசு கணித்துள்ள 4 சதவீதத்தைவிட அதிகமாகவே உயரும்.

சுதந்திரம் அடைந்த பிறகு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை சுமார் ரூ. 2100 கோடி செலவில் உருவாக்கி விவசாய அபிவிருத்திக்கு முதலிடம் தந்தோம். பஞ்சாபில் விவசாய வளர்ச்சி ...











- ..., TNT, VST GI & MS பைப் • ..., HDPE பைப்
- ... CPVC ... பைப்
- C.P. பிட்டிங்ஸ் ...

## ALS டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்

புது 166, பழைய 238, ... தெரு

...

**சென்னை 1**

போன் : 2524 0699 ... : 2523 0177

## AL.S.T.& Co

புது 784, பழைய 1019, ...

... CSI ...

**கோயம்புத்தூர் 18**

238 0388, 238 7 138

| 225 1566 | 22 4964 | 25 3486 | 25 0641 | 238 7 238 |
|---|---|---|---|---|
| 98427-16881 | 98423-16861 | 98421-16861 | 98427-16862 | 98422-32870 |

email : alstco@gmail.com